**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி ரகுநந்தன் வழக்குரையில் கண்ட 2வது அயிட்ட சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்குரையில் சொல்லியுள்ள சொத்துக்களில் கட்டுமானம் கட்டும் நிறுவனம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியுடன் தான் கட்டிடம் கட்டுவதற்கு நாங்கள் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம். திரள் நிதியை (corpus) கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக திரள் நிதி கோரி பரிகாரம் கோரியுள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் திரள் நிதி தொகையை திரும்ப கோரவில்லை. நான் முதல் விசாரணை உறுதி கூற்றில் பிரதிவாதிகள் என்ற வார்த்தையை பொதுவாக போட்டுள்ளேன். 2ம் பிரதிவாதியை பொறுத்து என் முதல் விசாரணை வாக்குமூலம் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த கோருரிமையும் இல்லாததால் 2ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 2 1/2 சென்ட் நிலத்தை எங்களது பேரவை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதாக கூறுவது பொய். 1ம் பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியிருப்பதால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை